பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 610 **நாள்: 25.10.2026**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மக்களுக்கான சுகாதார நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த 15.10.2026 முதல் நேற்று (24.10.2026) வரை 1,010 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 34,251 நபர்கள் பரிசோதனை மற்றும் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் உள்ள மக்களின் நல வாழ்விற்கான சுகாதார நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் 200 நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் 16 சமுதாய நல மருத்துவமனைகள் 3 மகப்பேறு மருத்துவமனைகள், தொற்று நோய் மருத்துவமனை என 360 மருத்துவமனைகள், 10 டயாலிசிஸ் மையங்கள் வாயிலாக மழைக்காலங்களில் பொது மக்களுக்குத் தேவையான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது சுகாதாரத்துறை மூலம் தொற்று நோய்களை கட்டுப்படுத்தவும் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்தவும் தினந்தோறும் சராசரியாக 100 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. இந்த சிறப்பு மருத்துவ முகாம்கள் குடிசைப் பகுதிகள் மற்றும் மழைநீர் தேங்கும் வாய்ப்புள்ள இடங்கள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நடத்தப்படுகிறது.

வடகிழக்குப் பருவமழை தொடங்கிய கடந்த 15.10.2026 முதல் நேற்று 24.10.2026 வரை 10 நாட்களில் 1,010 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 34,251 நபர்கள் பரிசோதனை மற்றும் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். இன்று (25.10.2026) 97 இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெறுகிறது.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி